




நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 120 25.10.2025 SATURDAY IPPASI : 8 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 120 25.10.2025 சனிக்கிழமை ஐப்பசி : 8 விலை : ரூ.5/–



3 திருச்சியில் ரெயில் விபத்து தீயணைப்பு துறையினர், தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், மருத்துவ குழுவினர் ஒத்திகை நிகழ்வு

4 சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு 3 வேளை உணவளிக்க ரூ.186 கோடி நிதி ஒதுக்கீடு

2 தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் மிக மோசமான நிலையில் உள்ளது : பாஜக நாராயணன் திருப்பதி அதிருப்தி


# சென்னையில் மழைநீர் தேங்குவதை தடுக்க 1436 மோட்டார் பம்புகள், 215 நிவாரண மையங்கள்

சென்னை: அக்.25-

சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றுவதற்காக 1,436 மோட்டார் பம்புகளும், 100பிஜீ திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகளும், டிராக்டர் மேல் பொருத்தப்பட்டுள்ள 500 மோட்டார் பம்புகளும் தயார் நிலையில் உள்ளது என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவமழை காரணமாக மக்கள் வாழும் பள்ளமான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக முதல்வர் ஸ்டாலின் நேரடியாகவும் காணொலி காட்சி வாயிலாகவும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகிறார்.

முதல்வர் ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், அமைச்சர் பெருமக்களும் மழைநீர் சூழும் பகுதிகளைப் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள். இந்த பருவமழைக் காலத்தில் 17.10.2025 அன்று காலை 8.30 மணிமுதல் 24.10.2025 காலை 8 மணிவரை சராசரியாக 179.80 மி.மீ. மழை பெய்துள்ளது. 23.10.2025 காலை 8.30 மணிமுதல் இன்று காலை 8 மணிவரை சராசரியாக 17.94 மி.மீ. மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 93.30 மி.மீ. மழை பெய்துள்ளது.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரைப் பொறுத்தவரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண



மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உணவு சுகாதார வசதி, குடிநீர் வசதி முதலியவை செய்யப்பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளன. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 22.10.2025 முதல் 23.10.2025 வரை 1,48,450 பேருக்கு காலை உணவும், 2,23,950 பேருக்கு மதிய உணவும் 28,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 4 லட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. 150 எண்ணிக்கையில் 100Hp மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2 ஆம்பிபியன், 3 ஆம்பி பியன் எஸ்கவேட்டர்கள், பல்வகை பயன்பாட்டிற்கான 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினிஆம்பி பியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

17.10.2025 முதல் 22.10.2025 வரை மழையின் காரணமாக விழுந்த 31 மரங்களும் அகற்றப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் 24 மணி நேரமும் கட்டணமில்லாமல் தெரி வித்து தேவையான உதவிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடகிழக்குப் பருவமழையால் பாதிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும், சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 23.10.2025 அன்று 3181 நடைகள் வாயிலாக தடை யில்லாமல் குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.




■ திருச்சி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம் மற்றும் முன்னணி வங்கிகள் இணைந்து நடத்திய மாபெரும் கல்விக்கடன் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் தொடங்கி வைத்து மாணவர்களுக்கு வங்கி கடன் உதவிக்கான ஆணை மற்றும் காசோலைகளை வழங்கி, விழாப் பேருரையாற்றினர். இந்நிகழ்வில் தனிமாவட்டவருவாய் அலுவலர்(நிலமெடுப்பு)ஆர்.பாலாஜி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எம்.முருகேசன், அரசு அலுவலர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.


## மாணவர் பத்திரிகையாளர் திட்டம்

பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக....

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

சமூகத்தில் அன்றாடம் நிகழும் கொடுமைகள், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக அரங்கேறும் செயல்பாடுகள்,

தங்கள் பகுதிகளில் இது போல் நடக்கும் சட்டத்திற்கெதிரான சம்பவங்களையும், அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறாத அவல நிலைகளையும் ""சக்கர வியூகம்"" மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தில் இணைந்து எங்களுக்கு அனுப்புங்கள்

உண்மை தன்மையறிந்து பிரசுரிக்கப்படும்

எனவே, பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கனவிலுள்ள மாணவ, மாணவியர் கீழ்க்கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சக்கர வியூகம் பத்திரிகை முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப படிவத்திற்கு ஸ்கேன் செய்யவும்.



FOUNDER / EDITOR
SAKKRA VIYUGAM INVESTIGATE DAILY
HO: #70/53 A1, THILAGAR NAGAR 1ST ST,
ANUPPARPALAYAM, TIRUPPUR-641652
WWW.SAKKRAVIYUGAM.COM
88705 00000







# சின்னாளபட்டி சமூக நீதி விடுதியில் காம்பவுன்ட் சுவர் பல இடங்களில் இடிந்து விழுவதால் மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை

## தகரம் மற்றும் பெட்சீட் கொண்டு தடுப்பு ஏற்படுத்தி இருப்பதால் மாணவர்கள் அவதி

சின்னாளபட்டி, அக்.25

சின்னாளபட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளி அருகே செயல்படும் சமூக நீதி விடுதியில் காம்பவுன்ட் சுவர் இடிந்து விழுவதால் மாணவர்கள் அவதிப்படுவதோடு காம்பவுன்ட் சுவர்கள் பல இடங்களில் இடிந்து விழுந்து வருவதால் காம்பவுன்ட் சுவர் அருகே செல்ல மாணவர்கள் அச்சப்படுகின்றனர். தகரம் மற்றும் பெட்சீட் கொண்டு தடுப்பு ஏற்படுத்தி இருப்பதால் மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளி அருகே செல்லும் டாக்டர் கருணாநிதி சாலையில் அரசு சமூக நீதி விடுதி உள்ளது. (பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் விடுதி) இதில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியை சேர்ந்த 115 மாணவர்கள் தங்கிஜீ உள்ளனர். அனைவரும் அருகில் உள்ள தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் சேர்ந்து படித்து வருகின்றனர். 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட காம்பவுன்ட் சுவர் பல இடங்களில் விரிசல்விட்டு கீழே விழுந்து வருகின்றன. குறிப்பாக விடுதியின் கிழக்குப்புறம் மற்றும் மேற்கு புறங்களில் காம்பவுன்ட் சுவர் இல்லாமல் திறந்த நிலையில் உள்ளது. இதனால் விடுதியின் உள்ளே விலங்குகள் மற்றும் அன்னியர்கள் உள்ளே புகும் நிலைமை உள்ளது. இதுதவிர மாணவர்கள் வெளியே செல்லும் நிலையும் உள்ளது. இரண்டு வருடங்களுக்கு மேலாக இதே நிலைமை நீடித்தும் அதிகாரிகள் காம்பவுன்ட் சுவர் கட்டுவதில் அலட்சியம் காட்டி வருவதாக அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் புகார் செய்கின்றனர். இதுதவிர விடுதி காப்பாளர்கள் இரண்டு மூன்று விடுதிகளை கண்காணிக்க வேண்டிய நிலை இருப்பதாலும் கண்காணிப்பு கேமரா மூலம் விடுதியை கண்காணித்து வருவதால் விடுதி மாணவர்களின் நடவடிக்கையை கண்காணிக்க முடியாத நிலை உள்ளது. மேலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் தரமும் பரிசோதிக்க முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. மாணவர்களின் நலன் கருதி சின்னாளபட்டியில் உள்ள மாணவர்கள் சமூக நீதி விடுதியில் காம்பவுன்ட் சுவர்களை புதுப்பித்துகொடுக்க வேண்டுமென சமூக ஆர்வளர்கள் கூறுகின்றனர்.

# மருது பாண்டியர்கள் நினைவு நாள் விழா, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் 118 வது ஜெயந்தி மற்றும் 63 வது குருபூஜை மதுபானக் கடைகள் அடைப்பு

சிவகங்கை, அக்.25-

27.10.2025 அன்று சிவகங்கை மருதுபாண்டியர்கள் நினைவு தினத்தை முன்னிட்டும், 29.10.2025 மற்றும் 30.10.2025 ஆகிய நாட்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகனாரின் 118 வது ஜெயந்தி மற்றும் 63 வது குருபூஜை விழாவை முன்னிட்டும், மதுரை மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கினை



நிலை நாட்டும் பொருட்டு 27.10.2025 (மாலை 7 மணி வரை மற்றும் 29.10.2025, 30.10.2025 ஆகிய தினங்களில் மட்டும்), FL1/FL2/FL3/FL3A/FL3AA/FL4 மற்றும் FL11 உரிமம் பெற்றுள்ள அனைத்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லரை விற்பனைக் கடைகள், மனமகிழ் மன்றங்கள், தங்கும் விடுதியுடன் கூடிய மதுபானக் கூடங்கள், படை வீரர்கள் கேண்டீன் மற்றும் அயல்நாட்டு மதுபான சில்லரை விற்பனை கடைகள் மூடப்பட்டு இருக்கும். மேற்படி தினங்களில் மது விற்பனை தொடர்பான விதிமீறல்கள் ஏதும் நடைபெறாமல் கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தினங்களில் மதுபான சில்லரை விற்பனை எதுவும் நடைபெறாது என மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., செய்திக்குறிப்பில் தெரி வித்துள்ளார்.



## ஈரோட்டில் பழமை வாய்ந்த பீரேஸ்வரர் கோயிலில் சாணியடி விழா: சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சாணி வீசி மகிழ்ந்தனர்

ஈரோடு, அக்.25-

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே சாணியால் ஒருவரை ஒருவர் அடித்து கொள்ளும் வினோத திருவிழா விமர்சியாக நடைபெற்றது. தாளவாடி அருகே கும்டாபுரம் கிராமத்தில் பழமை வாய்ந்த பீரேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு தீபாவளி பண்டிகை முடிந்து மூன்றாம் நாள் சாணியடி திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படுவது வழக்கம். இத்திருவிழா தொடங்குவதற்கு முன்பாக ஊர் குளத்தில் இருந்து கழுதை மேல் சாமியை அமரவைத்து ஊர்வலமாக கோயிலுக்கு அழைத்து வந்து சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. முன்னதாக கிராமத்தில் உள்ள பசுமாடுகளின் சாணம் சேகரிக்கப்பட்டு கோயிலின் பின்புறம் குவிக்கப்பட்டது. இதனை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை உருண்டையாக உருட்டி ஒருவர் மீது ஒருவர் வீசி மகிழ்ந்தனர். இந்த வினோத திருவிழாவில் தமிழ்நாடு மட்டுமின்றி கர்நாடக மாநில பக்தர்களும் பங்கேற்றனர்.

## தவெக கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழப்பு: சிபிஐ முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல்

கரூர், அக்.25-

தவெக கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான முதல் தகவல் அறிக்கையை (எஃப்ஐஆர்), கரூர் நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்துள்ளது.



கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த மாதம் 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் படுகாயம் அடைந்தனர். இதுதொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, குஜராத் மாநிலத்தை சேர்ந்த எஸ்.பி. பிரவீன் குமார் தலைமையில் 6 பேர் கொண்ட சிபிஐ குழுவினர் கடந்த 16ம் தேதி இரவு கரூர் வந்தனர். அவர்கள் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான சுற்றுலா மாளிகையில் தங்கி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த 19ம் தேதி சொந்த ஊர் சென்ற சிபிஐ அதிகாரிகள் நேற்று முன்தினம் மீண்டும் கரூர் திரும்பினர்.

இதற்கிடையே, சிபிஐ விசாரணையை மேற்பார்வை செய்ய, உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. தற்போது இந்த குழுவில், தமிழக பிரிவு ஐபிஎஸ் அதிகாரிகளான எல்லைப் பாதுகாப்பு படை ஐஜி சுமித் சரண், டெல்லி ரிசர்வ் போலீஸ் படை ஐஜி சோனல் மிஸ்ரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களும் விரைவில் கரூர் வந்து சிபிஐ விசாரணையை மேற்பார்வையிட உள்ளனர்.

இந்நிலையில், கரூர் முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஓர் ஆவணத்தை தாக்கல் செய்வதற்காக சிபிஐ ஆய்வாளர் மனோகர் நேற்று முன்தினம் வந்தார். ஆனால், மாஜிஸ்திரேட் பரத்குமார் 3 நாட்கள் விடுப்பில் உள்ளதால், 2வது நீதிமன்ற மாஜிஸ்திரேட் சார்லஸ் ஆல்பர்ட்டிடம் அந்த ஆவணத்தை அவர் ஒப்படைத்தார். எஸ்.பி. பிரவீன் குமார் தலைமையிலான சிபிஐ குழுவினர் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக மேற்கொண்ட முதல்கட்ட விசாரணையின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையை (எஃப்ஐஆர்), நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைப் பெரியாறு வெள்ள நீரால் சேதமடைந்த பயிர்களுக்கு நிதியுதவி வைகோ வலியுறுத்தல்

சென்னை, அக்.25-

"அதி கனமழையால் முல்லைப் பெரியாறு அணை பாசன பகுதியில் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. சேதமடைந்துள்ள நெற் பயிர் மற்றும் தோட்டப் பயிர்களைக் கணக்கீடு செய்து தமிழ்நாடு அரசு இழப்பீட்டு நிதி உதவி வழங்கிட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்" என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள முல்லைப் பெரியாறு பாசனப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வயல்வெளி மற்றும் தோட்டப்பகுதிகளுக்குள் நீர் புகுந்து பெரிதும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது.

தேனி மாவட்டத்தில் பருவமழை தீவிரம் அடைந்து, 32 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக கனமழை பெய்ததால், கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான சுருளிப்பட்டி, நாராயணதேவன்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் உள்ள மலைக் கிராம ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் தமிழக கேரள எல்லைப் பகுதியில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் அதிக கனமழை பெய்ததால், முல்லைப் பெரியாற்றில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீருடன், சிற்றோடைகளின் நீரும் கலந்து முல்லைப் பெரியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆற்றின் கரையோரப் பகுதியிலும், பாசனப் பகுதியில் உள்ள அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள், காய்கறிகள் நீரில் மூழ்கி பாதிப்பு அடைந்திருக்கின்றன. வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள் நீரால் சூழப்பட்டுள்ளன.

சின்ன வாய்க்கால், உத்தமமுத்து வாய்க்கால், மற்றும் கம்பம், சின்ன மனூர், உத்தமபாளையம், உப்புக்கோட்டை, பாலார்பட்டி கூழையனூர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் வாய்க்கால்களில் உடைப்பு ஏற்பட்டு வெள்ள நீர் வயல்களில் புகுந்து, அறுவடைக்கு தயாராக இருந்த நெற் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகி இருக்கின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

எனவே, மழை மற்றும் முல்லைப் பெரியாற்று வெள்ள நீரால் சேதமடைந்துள்ள நெற் பயிர் மற்றும் தோட்டப் பயிர்களைக் கணக்கீடு செய்து தமிழ்நாடு அரசு இழப்பீட்டு நிதி உதவி வழங்கிட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். உடைப்பு ஏற்பட்டு சேதமடைந்த வாய்க்கால் கரைகளை செப்பனிட்டு சீர்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



## வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள திருச்சி மாநகராட்சியில் 24 மணி நேரமும் கண்காணிப்பு அலுவலகம்

திருச்சி, அக்.25-

திருச்சி மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையின் புகார் எண். 8300113000 மற்றும் 04313524200 ஆகிய எண்களுக்கு திருச்சி மாநகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். தற்போது 5 மண்டங்களிலும் மழைநீரை வெளியேற்றுவதற்காக 20எச்பி ஆயில் இன்ஜின்மின் மோட்டார்கள், மரம் அறுக்கும் இயந்திரம் மற்றும் கழிவு நீர்

அகற்றுவதற்கான வாகனங்கள் தயார் நிலையில் உள்ளது. மேலும் 12 இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதை கண்டறியப்பட்டு மாநகராட்சி பணியாளர்கள் மூலம் மழைநீர் அகற்றப்பட்டது.

வெள்ள நிவாரண முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் அதிகம் பாதிக்கப்படும் இடங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கென மாநகராட்சிக்குள் 22 இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

## ஜன.21 முதல் 30 வரை ஜேஇஇ முதன்மைத் தேர்வு: தேசிய தேர்வுகள் முகமை அறிவிப்பு



சென்னை, அக்.25-

பொறியியல் படிப்புகளுக்கான ஜேஇஇ முதல்கட்ட முதன்மைத் தேர்வு ஜனவரி 21 முதல் 30ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

ஐஐடி, என்ஐடி போன்ற மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் இளநிலை படிப்புகளில் சேர ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வில் (ஜேஇஇ) தேர்ச்சி பெற வேண்டும். இவை ஜேஇஇ முதன்மைத் தேர்வு, பிரதானத் தேர்வு என இரு பிரிவாக நடத்தப்படுகிறது. இதில் முதன்மைத் தேர்வு, தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) சார்பில் ஆண்டுதோறும் 2 கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 2026-27ம் கல்வியாண்டுக்கான ஜேஇஇ முதன்மைத் தேர்வு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்தப்பட உள்ளன.

இதில் முதல்கட்ட முதன்மைத் தேர்வு 2026 ஜனவரி 21 முதல் 30ம் தேதிக்குள் நடைபெற உள்ளது. இதற்கான இணையதள விண்ணப்பப்பதிவு இம்மாத இறுதியில் தொடங்கும். https://jeemain.nta.nic.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்கலாம். அதேபோல், 2ம் கட்ட முதன்மைத் தேர்வுகள் ஏப். 1 முதல் 10ம் தேதிக்குள் நடத்தப்படும். மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், குறிப்பாக மாற்றுத்திறன் மாணவர்களுக்காக சிறப்பு கவனம் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக என்டிஏ தெரிவித்துள்ளது.



## தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் மிக மோசமான நிலையில் உள்ளது : பாஜக நாராயணன் திருப்பதி அதிருப்தி

திருச்சி, அக்.25-

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் மிக மோசமான நிலையில் உள்ளது. முறையான கட்டமைப்புகள் இல்லாததால் நெல் வீணாகி வருகிறது. நெல் கொள்முதலை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த நான்கரை ஆண்டுகளாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.500 கோடி மதிப்பிலான 3.75 லட்சம் டன் நெல் வீணடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாளொன்றுக்கு 2 ஆயிரம் மூட்டைகள் கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால், 600 முதல் 700 மூட்டைகள் கூட கொள்முதல் செய்வதில்லை. எனவே, விவசாய விரோத அரசாக தமிழக அரசு உள்ளது. மேலும், கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து நெல் மூட்டை ஒன்றுக்கு ரூ.40 வசூலிக்கப்படுகிறது. நெல்லை கொள்முதல் செய்வதற்கும், அதை பாதுகாப்பதற்கும் மத்திய அரசு தமிழக அரசுக்கு நிதியளிக்கிறது. ஆனால், தமிழக அரசு உரிய கட்டமைப்புகளை உருவாக்காமலும், நெல் கொள்முதலை முறையாக மேற்கொள்ளாமலும் தவறியிருக்கிறது. மழை வரும் என்று தெரிந்தும் நெல் கொள்முதலில் அரசு கவனம் செலுத்தவில்லை.

பேட்டியின் போது திருச்சி மாநகர் மாவட்ட தலைவர் ஒண்டிமுத்து, பொருளாளர் செல்லதுரை, சமூக ஊடகப்பிரிவு மாநில செயலாளர் புகழ் மச்சேந்திரன் ஊடகப்பிரிவு மாவட்டத் தலைவர் முரளி தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட தலைவர் ஒப்பிலி சீனிவாசன், ஊடகப்பிரிவு மாவட்ட செயலாளர்கள் பால சந்திரன் வீரராகவன், ரங்கநாதன், கோபாலகிருஷ்ணன் மற்றும் தொழில்நுட்பம் பிரிவு மாவட்ட துணைத் தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## பெண்களை காப்போம் - திசையன்விளை மனோ கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திசையன்விளை, அக்.25-




திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகக் கல்லூரியில் சமூக நலத்துறை - மகளிர் உரிமைத் துறை மற்றும் நாட்டு நலப்பணி (NSS) இணைந்து "பெண் குழந்தையை பாதுகாப்போம் - பெண் குழந்தைக்கு கற்பிப்போம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் டி. லில்லி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சமூக நலத்துறை அதிகாரிகள் மேரி செல்வம் மற்றும் பிரேம் ஜெயஸ்ரீ அவர்கள் கலந்து கொண்டு, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

மகிழ்ச்சி மக்கள் கலைக்குழுவினர் கரகாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், வாடிப்பட்டி போன்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளின் மூலம் மாணவர்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் சு. பலவேச கிருஷ் ணன் அவர்கள் செய்திருந்தார். நன்றி உரையை வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் சண்முகம் அவர்கள் வழங்கினார். நிகழ்ச்சியில் அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை: சென்னை ஆட்சியர் தகவல்

சென்னை, அக்.25-

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப் பிரிவுகளில் நேரடி மாணவர் சேர்க்கை மூலம் பயில நவம்.14ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் 2025 2026ம் கல்வியாண்டுக்கான மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப் பிரிவுகளில் மாவட்ட அளவிலான சேர்க்கை வாயிலாகவும், அதனைத் தொடர்ந்து முன் விண்ணப்பமில்லா நேரடி சேர்க்கை முறையிலும் நடைபெறும் அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த நபர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றன.

அதன்படி, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் ஓராண்டு அனஸ்தீஸியா டெக்னீசியன், ஓராண்டு அறுவை அரங்கு டெக்னீசியன், ஓராண்டு ஆர்தோபீடிக் டெக்னீசியன் போன்ற சான்றிதழ் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் 2025 2026ம் கல்வியாண்டுக்கான மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப் பிரிவுகளில் பயில ஓராண்டு அனஸ்தீஸியா டெக்னீசியன் பாடப்பிரிவில் 18 காலியிடங்களும், ஓராண்டு அறுவை அரங்கு டெக்னீசியன் பாடப் பிரிவில் 21 காலியிடங்களும், ஓராண்டு ஆர்தோபீடிக் டெக்னீசியன் 9 காலியிடங்களும் என மொத்தம் 48 இடங்கள் காலியாக உள்ளன.

காலியிடங்கள் தொடர்பான விவரங்கள் https://gmcomu.ac.in/ வலைதளத்திலும், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவ கல்லூரியின் அறிவிப்பு பலகையிலும் காணலாம். மேற்கண்ட பாடப் பிரிவிகளில் பயில, விண்ணப்பதாரர் டிசம்பர் 31ம் தேதி அன்று 17 வயதை நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும். தெரிவுக்/தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவராக பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சேர்க்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கான 5% இடஒதுக்கீடு உள்ளிட்ட தமிழக அரசின் இடஒதுக்கீட்டு நடைமுறை பின்பற்றப்படும்.

விண்ணப்பங்கள் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர், துணை முதல்வர் அலுவலகத்தில் கட்டணமின்றி வழங்கப்படும். உரியமுறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் நவம்பர் 14ம் தேதி அன்று அல்லது அதற்கு முன்னர் முதல்வர், துணை முதல்வர் அலுவலகத்தில் அளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட பாடப் பிரிவிகளில் பயில்வதற்கான நேரடி மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. முழு மாணவர் சேர்க்கை செயல் முறையும் நவம்பர் 14ம் தேதி அன்று நிறைவு பெறும். இதற்கான கலந்தாய்வு சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெறும்.

விண்ணப்பிக்கும் போது விண்ணப்பத்துடன் மேனிலைப்பள்ளி மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்று சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் (பொருந்துமாயின்), சாதிச் சான்றிதழ், வயதுச் சான்று (பிறப்புச் சான்றிதழ் / பள்ளிச் சான் றிதழ்), மாவட்ட மருத்துவ வாரியத்திடம் இருந்து பெறப்பட்ட மாற்றுத் திறனாளி சான்றிதழ் (பொருந்துமாயின்), ஆதார் அட்டை அல்லது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

தெரிவு செய்யும் நடைமுறை பரிந்துரைக்கப்பட்ட விதிகளின்படி முற்றிலும் தகுதி மற்றும் வகுப்பு வாரி இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அமையும். கலந்தாய்வின் போது ஒதுக்கீடு ஆணைகள் அந்த இடத்திலேயே வழங்கப்படும். சுகாதாரத் துறையில் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் திறன் அடிப்படையிலான சான்றிதழ் பாடப் பிரிவுகளில் பயில்வதற்கு இந்த வாய்ப்பை தகுதியுள்ள மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

இந்தப் பாடப் பிரிவுகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள், பொருந்தக்கூடிய விதிகளுக்கு ட்பட்டு "வெற்றி நிச்சயம்" திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்களாக இருக்கலாம். எனவே, மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப் பிரிவுகளில் பயில ஆர்வம் உள்ள தகுதியான மாணவ, மாணவியர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்று சென்னை ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் தெரிவித்துள்ளார்.

# புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு இத்திட்டத்தில் பயனடைந்து வரும் திருப்பூர் மாவட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் தங்களது நன்றியினை தெரிவித்தார்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே "நிறைந்தது மனம்" நிகழ்ச்சி குறித்து சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் கல்லூரியில் பயிலும் 38,652 மாணவிகள் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் 15,970 மாணவர்களுக்கும் மாதம் ரூ.1,000/ வீதம் அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல உன்னதமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் அனைத்து வளர்ச்சியிலும் பெண்களுக்கு உரிய இடம் வழங்கும் பொருட்டும், பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையிலும் பல்வேறு திட்டங்கள் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பெண்கல்வியை போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தை தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், படைப்பியலாளராகவும், உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தை சார்ந்தவராகவும், உருவாக அடித்தளமாக "புதுமைப் பெண்" என்னும் உன்னத திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.

"தமிழ்ப் புதல்வன்" என்னும் தொலைநோக்கு திட்டத்தினை செயல்படுத்துகையில் மாணவர்கள் கல்லூரியில் அதிக அளவில் சேர்க்கை விகிதம் அதிகமாவதற்கு வழிவகை செய்யும். அரசு பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகப்படுத்தும். மாணவர்கள் பாட புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி கல்வியை மெறுகேற்றிட உதவும். இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர் கால தூண்களாக திகழ்வார்கள். கல்வி இடை நிற்றலை தடுக்க முடியும்.

6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவர்கள், 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பெறும் மாணவர்கள் இத்திட்டத்தில்





கலை மற்றும் அறிவியல் பிரிவு, பொறியியல் பிரிவு, மருத்துவ படிப்பு, சட்டம் சார்ந்த படிப்புகள், ஒருங்கிணைந்த பாட பிரிவு, தொழிற் கல்வி, செவிலியர், இயன்முறை மருத்துவம், யோகா படிக்கும் மாணவர்கள் பயனடையும் வகையில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் மூலம், உயர் கல்வி அளித்து, பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல், குழந்தை திருமணத்தைத் தடுத்தல், குடும்பச் சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவ, மாணவியர்களின் பொருளாதார ரீதியாக உதவுதல், மாணவ, மாணவியர்களின் இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல், மாணவ, மாணவியர்களின் விருப்பத் தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பை தொடர ஊக்குவித்தல், உயர் கல்வியினால் மாணவ, மாணவியர்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்துத் துறைகளிலும் பங்கேற்கச் செய்தல், உயர்கல்வி உறுதித் திட்டத்தின் மூலம் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், மாணவ, மாணவியர்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்தல் போன்றவற்றின் மூலம் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மாணவ, மாணவியர்களின் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் படித்து தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசுப் பள்ளியில் படித்த மாணவ, மாணவியர்களின் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

திருப்பூர் மாவட்டத்தில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 6,821 மாணவிகளுக்கும், 2023-2024ஆம் ஆண்டில் 8,381 மாணவிகளுக்கும், 2024-2025 ஆம் ஆண்டில் 11,198 மாணவிகளுக்கும், 2025-2026ஆம் ஆண்டில் 12,252 மாணவிகளுக்கும் என 71 கல்லூரிகளில் பயிலும் 38,652 மாணவியர்களுக்கும், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் 2024-2025 ஆம் ஆண்டில் 7,668 மாணவர்களுக்கும், 2025 -2026 ஆம் ஆண்டில் 8.302 மாணவர்களுக்கும் என 51 கல்லூரிகளில் பயிலும் 15,970 மாணவர்கள் கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1,000/ வீதம் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி உதவித்தொகையை பெற்ற செல்வன் ஆ.ராஜீவ் தெரிவித்ததாவது,




என் பெயர் அ.ராஜீவ், நான் திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரியில் விலங்கியல் இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறேன். எனது பெற்றோர்கள் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறார்கள். நான் உயர்கல்வி படிக்க வேண்டும், என்பதற்காக என்னுடைய பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டு என்னை படிக்க வைக்கிறார்கள். நான் அரசு பள்ளியில்தான் படித்தேன், என்னுடைய படிப்பிற்கான தேர்வுக் கட்டணம், புத்தகம் வாங்கும் செலவு, உள்ளிட்ட செலவுகளை சமாளிக்க முடியாமல் படிப்பை தொடர முடியுமா என்ற நிலையில் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்த அன்றே என்னுடைய வங்கி கணக்கில் ரூ.1,000/ செலுத்தப்பட்டதற்கான குறுஞ்செய்தி வரப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது எனக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1,000/ உதவித்தொகை வருகிறது. இதன் மூலம் எனது கல்லூரி படிப்பிற்கு தேவையான புத்தகங்கள், பேனா, நோட், ஜெரக்ஸ் எடுப்பது உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்ய முடிகிறது. என்னுடைய உயர்கல்வி படிப்பை தடையின்றி தொடரமுடிகிறது.

எங்களைப்போன்ற எழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த எங்களுக்கு உயர்கல்வி படிப்பை தொடர தாய், தந்தையர் ஸ்தானத்திலிருந்து எங்களுக்கு பாதுகாப்பாகவும், பேருதவியாக இருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும், என்னைப் போன்ற மாணவர்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் உயர்கல்வி உதவித்தொகையை பெற்ற செல்வி. டோனா அனுஷியா தெரிவித்ததாவது,




என் பெயர் டோனா அனுஷியா. நான் திருப்பூர் மாவட்டம், மங்கலம் பகுதியில் வசித்து வருகிறேன். தீரன் சின்னமலை மகளிர் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு வணிகவியல் துறை படித்து வருகிறேன். எனது தாய் தந்தையர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகின்றனர். மிக குறைவான வருமானத்தில் தான் எங்களுடைய குடும்ப செலவுகளுடன், படிப்பிற்கான செலவுகளையும் மிக சிரமப்பட்டு சமாளித்து வந்தோம். எனக்கு உயர்கல்வி படிக்கு முடியாத சூழ்நிலை ஏற்படும் என மிகவும் கவலைப்பட்டேன். இத்தகைய சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுமைப் பெண் திட்டத்தினை அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அன்றே என்னுடைய வங்கி கணக்கில் ரூ.1,000/ வந்துள்ளதாக குறுஞ்செய்தி வரப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது எனக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1,000/உத வித்தொகை வருகிறது. எனது கல்லூரி படிப்பு செலவிற்கு இத்தொகை எனக்கு பேரூதவியாக இருக்கிறது. எங்களைப்போன்ற எழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டம் மூலம் எங்களது கல்வியை மென்மேலும், படிப்பதற்கு வழிவகை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் என்கிற உன்னத திட்டங்களை தொடங்கி வைத்து உயர்கல்வியினை உறுதி செய்து வருகிறார்கள். புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டம் மாணவ, மாணவியர்களின் முன்னேற்றத்திற்கான புரட்சிகரமான திட்டம் என பயனடைந்து வரும் கல்லூரி மாணவ, மாணவியர்களால் பாராட்டப்படுவது மிகப் பொருத்தமானதாகும்.

**வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

## கேப்டன் ஆலயத்தில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் விசைத்தறி பி.ஆர்.குழந்தைவேல் ஏற்பாட்டில் சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் வழங்கும் விழா

சென்னை, அக்.25-

சென்னை கோயம்பேட்டில் உள்ள கேப்டன் ஆலயத்தில் கழகப் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் தலைமையில், திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் விசைத்தறி பி.ஆர்.குழந்தைவேல் ஏற்பாட்டில், சிறப்பு பூஜை மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ராயபுரம் பா.ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர் வசந்த் ஆர்.யுவராஜ், திருப்பூர் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், கொங்குநகர் பகுதி பொறுப்பாளர் ரத்தினம், குமார்நகர் பகுதி செயலாளர் சண்முகராஜா, மாவட்ட கேப்டன் மன்ற துணைச்செயலாளர் முத்துகுமார்பாண்டி, மாவட்ட தொழிற்சங்க தலைவர் ரங்கநாதன், மாவட்ட தொழிற்சங்க துணைத்தலைவர் ஆடலரசு, ஒன்றிய அவைத்தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய துணைச்செயலாளர் தரணி பாபு மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.





■ மதுரை மாவட்டம் கிழக்கு வட்டம் வண்டியூர் அருள்மிகு வீரராகவப்பெருமாள் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



## திருச்சி கல்லூரி மாணவர்களுக்கான தடகள போட்டிகள் பிஷப் ஹீபர் கல்லூரி சாம்பியன் பட்டம்

திருச்சி, அக்.25-

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கரூர், தஞ்சை, நாகை, திருவாரூர், புதுகை ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் , மாணவர்களுக்கான 43 வது வருட தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் திருச்சி அண்ணா விளயாட்டரங்கில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது. இதில் 53 கல்லூரிகளிலிருந்து 523 மாணவர்கள் பங்கேற்றனர். போட்டியில் மாணவர்கள் பிரிவில் 11 தங்கம், 9 வெள்ளி, 1 வெண்கலம் பதக்கங்களுடன் பிஷப் ஹீபர் கல்லூரி பதக்கங்களுடன் அணி சாம்பியன்ஷிப் பட்டத்தை பெற்றது. இதில் 7 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கல பதக்கங்களுடன் செயின்ட் ஜோசப் கல்லூரி இரண்டாவது இடத்தையும், 2 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கல பதக்கங்களுடன் ஜமால் முகமது கல்லூரி மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

சிறந்த தடகள வீரராக ஜமால் முகமது கல்லூரியை சேர்ந்த பரந்தாமன் கிருஷ்ணன் தேர்ந்தெடுக்கபட்டார். பரிசளிப்பு விழாவில் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் குழு உறுப்பினர்கள் வி. ராஜேஷ் கண்ணன், ஆர். சக்தி கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகளாக கலந்து கொண்டு, பேராசிரியர் மற்றும் விளையாட்டு செயலாளர் ஏ. மெஹபூப் ஜான், திருச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் ஞானசுகந்தி ஆகியோர் முன்னிலையில் பரிசுகளை வழங்கினார்.

## திருச்சியில் ரெயில் விபத்து தீயணைப்பு துறையினர், தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், மருத்துவ குழுவினர் ஒத்திகை நிகழ்வு

திருச்சி, அக்.25-

ரெயில் விபத்து தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி ரெயில்வே குட்ஷெட் யார்டு பகுதியில் நடைபெற்றது. அதன்படி திருச்சி குட்ஷட் யார்டு பகுதியில் சென்ற ஒரு ரெயில் தண்டவாளத்தில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக 2,3 ரெயில் பெட்டிகள் கவிழ்ந்து கிடப்பத்தை போன்று சித்தரிக்கபட்டு இருந்தது. மேலும் கவிழ்ந்து கிடந்த ரெயில் பெட்டியில் தீப்பிடித்து புகை மளமளவென்று வெளிவந்தது..




பிறகு உடனடியாக ஆம்புலன்ஸ், தீயணைப்புத்துறையினர், பேரிடர் மீட்பு குழுவினர், ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார், ரெயில்வே போலீசார், ரெயில்வே அதிகாரிகள், அலுவலர்களுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்படுகிறது தகவறிந்து அனைவரும் அங்கு திரண்டு வந்தனர். பிறகு தீயணைப்பு துறையினர் தீயணைப்பு வண்டியுடன் அங்கு விரைந்து வந்தனர். இதையடுத்து ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ குழுவினர் வந்தனர்.பின்னர் கவிழ்ந்து கிடந்த ரெயில் பெட்டியின் மீது ஏறி தீயணைப்புத்துறை ஊழியர்கள் முதலில் தீப்பிடித்த ரெயில் பெட்டியை அணைத்தனர். ரெயில் பெட்டி ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே தீயணைப்பு துறையினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் சென்று ரெயில் பெட்டிக்குள் சிக்கியிருந்த பயணிகள் ஒவ்வொருவரையும் பத்திரமாக காப்பாற்றி கீழே இறக்கினர். பின்னர் சம்பவ இடத்தில் இருந்த பேரிடர் மீட்பு குழுவினர், திருச்சி ரெயில்வே பாதுகாப்பு படையினர் ரெயில்வே போலீசார் கொண்ட குழுவினர் காயமடைந்த பயணிகளை காப்பாற்றினார்.

இந்த ஒத்திகை சம்பவத்தால் அந்தப் பகுதியில் ஏதோ விபத்து நடந்து விட்டது போன்று அனைத்து பொதுமக்கள் ஏராளமானவர்கள் அங்கு கூடி இந்த ஒத்திகை நிகழ்ச்சியை பார்வையிட்டனர். இந்த ஒத்திகை நிகழ்ச்சி சுமார் நான்கு மணி நேரம் நடைபெற்றது.

திருச்சி ரெயில்வே கோட்ட மேலாளர் பாலக்ராம் நெகி மற்றும் ரெயில்வே அதிகாரிகள் உடனிருந்து பார்வையிட்டனர்.

## மதுரை அலங்காநல்லூர் தண்டலை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

அலங்காநல்லூர், அக்.25-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள தண்டலை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் வள்ளி, கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். இந்த முகாமில் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாறுதல், மருத்துவ காப்பீடு, பொது மக்களுக்கு மருத்துவ பரிசோதனை, ஆதார் அட்டையில் திருத்தங்கள், கூட்டுறவுத் துறை, காவல்துறை, சமூகநலத்துறை, உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அந்தந்த துறைச் சார்ந்த அரங்குகளில் உள்ள அலுவலர்களிடம் பொதுமக்கள் வழங்கினர். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரேணுகா, கண்ணன், ஊராட்சி செயலாளர்கள் நாகராஜன், முருகேஸ்வரி, கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு 3 வேளை உணவளிக்க ரூ.186 கோடி நிதி ஒதுக்கீடு

சென்னை, அக்.25-

சென்னை மாநகராட்சியில், தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளை உணவளிக்க ரூ.186 கோடியை ஒதுக்கீடு செய்து, தமிழக அரசு உத்தர விட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில், தூய்மைப் பணியை தனியார் மயமாக்குவதை கண்டித்து, தூய்மைப் பணியாளர்கள் ரிப்பன் மாளிகை முன்பு கடந்த ஆகஸ்ட் மாதம் காலவரையற்ற போராட்டம் நடத்தி வந்தனர்.



இதை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக, ஆக.14ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில், தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்குவது உள்ளிட்ட 7 அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தனியார் நிறுவனம் மூலமாக தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு அளிப்பது தொடர்பாக சென்னை மாநகராட்சி நிர்வாகம் செயற்குறிப்பு ஒன்றை தயாரித்து, நிதி ஒதுக்கக் கோரி தமிழக அரசுக்கு அனுப்பி இருந்தது. அதில், ‘‘சென்னை மாநகராட்சியில் பல்வேறு பிரிவுகளில் நிரந்தரமாகவும், தனியார் மூலமும் 29,455 தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

அவர்களுக்கு 512 இடங்களில் 3 வேளை உணவு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 3 ஆண்டுகளுக்கு செயல்படுத்த ரூ.186 கோடி செலவாகும். அந்த தொகையை 6வது மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து வழங்க வேண்டும்’’ என கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாநகராட்சியின் செயற்குறிப்பை கவனமுடன் பரிசீலித்த அரசு, தூய்மைப்பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு 3 வேளை உணவு வழங்க ரூ.186 கோடி வழங்க அண்மையில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேலும், அனைத்து உணவுகளும் உணவு பாதுகாப்பு தரக்கட்டுப்பாடு நிறுவனம் சான்றளித்த சமையல் அறையில் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைளையும் அரசு விதித்துள்ளது.

# ஆபத்தான முறையில் பாம்பாற்று வெள்ளத்தை கடந்து செல்லும் மாணவர்கள்

திருப்பத்தூர், அக்.25-

திருப்பத்தூர் அருகே பாம்பாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் உயிருக்கு ஆபத்தான நிலையில் பள்ளி மாணவ, மாணவிகள் சென்று வருகின்றனர். திருப்பத்தூர் மாவட்டம் பொம்மிக்குப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட பழைய அத்திக்குப்பம் கிராமத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன.



ஆயிரக்கணக்கான மக்கள் இந்த கிராமத்தில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக திருப்பத்தூர் நகர் பகுதிக்கு வர வேண்டுமென்றால் அங்குள்ள பாம்பாற்றை கடந்து வர வேண்டிய நிலை உள்ளது. மழைக்காலங்களில் பாம்பாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் பழைய அத்தி க்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் நகர் பகுதிக்கு வந்து செல்ல கடும் சிரமத்தை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில், திருப்பத்தூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் ஆண்டியப்பனூர் அணை முழு கொள்ளளவை எட்டி அதன் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த உபரி நீரானது பாம்பாற்றின் வழியாக கரைபுரண்டு ஓடுவதால் பழைய அத்திக்குப்பம் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் ஆற்று வெள்ளத்தை ஆபத்தான முறையில் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து பழைய அத்திக் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கூறும்போது, ‘‘பாம்பாற்றை கடந்து செல்ல உயர்மட்ட மேம்பாலம் கட்டித்தர வேண்டும் என தலைமுறை, தலைமுறையாக கோரிக்கை மனு அளித்து வருகிறோம். ஆனால், எங்கள் கோரிக்கை பல ஆண்டுகளாகியும் இதுவரை நிறைவேற்றப்படாமல் கிடப்பிலேயே உள்ளது.

ஆண்டியப்பனூர் அணை எப்போதெல்லாம் நிரம்புகிறதோ, அப்போதெல்லாம் எங்களால் நகர் பகுதிக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. பாம்பாறு முழுவதும் தண்ணீர் ஆர்ப்பரித்து ஓடுவதால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆபத்தான முறையில் ஆற்றை கடந்து சென்று வருகின்றனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு எங்கள் கிராமத்தைச் சேர்ந்த ராதா (45) என்பவர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு உயிரிழந்தார். அவரது உடலை அடக்கம் செய்ய உடலை சுமந்து நாங்கள் ஆற்று வெள்ளத்தை கடந்து சென்று தான் அடக்கம் செய்தோம். இப்படி, விவசாயம், கல்வி, தொழில், வர்த்தகம் என பல்வேறு தேவைகளுக்காக எங்கள் கிராமத்தில் இருந்து 15 கி.மீ., தொலைவில் உள்ள திருப்பத்தூர் நகரை அடைய மழைக்காலங்களில் நாங்கள் எதிர்கொள்ளும் சவாலுக்கு அளவே இல்லை.

எங்கள் கிராம மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி நாங்கள் ஏறாத அரசு அலுவலகங்கள் இல்லை. பார்க்காத அரசு அதிகாரிகள், அரசியல் கட்சியினர் இல்லை. ஆனால், எங்கள் கோரிக்கையானது எப்போது நிறைவேறுமோ தெரியவில்லை. பொதுமக்களின் நிலை அறிந்து மாவட்ட நிர்வாகம் உடனடியாக பாம்பாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் ஒன்றை அமைத்து தரவேண்டும் என்பதே எங்களின் நீண்ட நாள் கோரிக்கை’’ என்றனர்.



# ராமநாதபுரத்தில் மழையால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெல், மிளகாய் பயிர்கள் நீரில் மூழ்கின

ராமநாதபுரம், அக்.25-

கனமழை காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெல், மிளகாய் பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பகுதி மானாவாரியாக உள்ளதால், மழையையும், வைகை நீரையும் நம்பி ஆண்டு தோறும் 3 லட்சம் ஏக்கருக்கு மேல் நெல்லும், 45 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மிளகாயும் பயிரிடப்படுகின்றன. கடந்த 16ம் தேதி முதல் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

கடந்த 19ம் தேதி முதல் 2 நாட்கள் கனமழை பெய்தது. இதனால் வயல்வெளிகளில் குளம்போல தண்ணீர் தேங்கிஉள்ளது. அனைத்துப் பகுதிகளிலும் மழைநீர் தேங்கியுள்ளதால், தண்ணீரை வெளியேற்ற முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

குறிப்பாக, திருஉத்தரகோச மங்கை அருகேயுள்ள நல்லாங்குடி, களக்குடி, பனைக்குளம், எக்ககுடி பகுதிகளில் 500 ஏக்கருக்கும் மேல் நெற்பயிர் நீரில் மூழ்கியது. ராமநாதபுரம் அருகேயுள்ள சூரங்கோட்டை, ஆர். காவனூர், முதுனாள், தொருவளூர் உள்ளிட்ட பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கியது.

அதேபோல, மண்டபம் ஒன்றியம் மானாங்குடி ஊராட்சிக்கு உட்பட்ட மானாங்குடி, கடுக்காய் வலசை, மேலமண்குண்டு, கீழமண்குண்டு பகுதிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு ஒரே நாளில் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டிருந்த நெற்பயிர் மழைநீரில் மூழ்கியது.

முதுகுளத்தூர் அருகேயுள்ள தாழியரேந்தல், மட்டியரேந்தல் உள்ளிட்ட கிராமங்களில் நெல் வயல்களிலும், மிளகாய் வயல்களிலும் மழைநீர் தேங்கியுள்ளது. விவசாயிகள் தண்ணீரை வெளியேற்ற முடியாமல் வேதனையில் உள்ளனர். இந்த வயல்களில் தண்ணீர் வடிந்ததும் மீண்டும் நெல் அல்லது மிளகாய் விதைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மானாங்குடி முன்னாள் ஊராட்சித் தலைவர் பரமேஸ்வரி கூறும்போது, ‘‘எங்கள் ஊராட்சிப் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ளோம். வயல்களில் மழைநீர் தேங்கி, நெற்பயிர் அனைத்தும் மூழ்கியது. இதனால், மீண்டும் விதைக்க விதை நெல்கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் பாதிக்கப்பட்ட நிலங்களை கணக்கெடுத்து, விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்’’ என்றார்.

இழப்பீடு வழங்க வேண்டும்: சூரங்கோட்டை விவசாயி ஸ்டாலின் கூறும்போது, ‘‘மழை விட்டு 2 நாட்களாகியும் மழைநீர் வடியாமல் வயல்வெளிகளில் தேங்கி நிற்பதால், நெற்பயிர் அழுகி வருகிறது. மழைநீர் வெளியேற முடியாமல் வடிகால்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்‘‘ என்றார்.

# 5 ஆண்டுகளில் சாலை அமைத்ததாக கணக்கு காட்டிய தமிழக அரசின் ரூ.78 ஆயிரம் கோடி நிதி எங்கே? அண்ணாமலை கேள்வி

சென்னை, அக்.25-

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் சாலைகள் அமைத்ததாக கணக்கு காட்டிய ரூ.78 ஆயிரம் கோடி நிதி எங்கு சென்றது என முதல்வர் ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது: தமிழக கர்நாடகா எல்லைப் பகுதியான ஈரோடு மாவட்டம் பர்கூர் மலையில் 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்குள்ள குட்டையூர், வேலாம்பட்டி, மட்டிமரத்தள்ளி ஆகிய மலை கிராமங்களுக்கு நேரடியாகச் செல்ல பாதை இல்லை. கர்நாடக, தமிழக வனப்பகுதிக்கு மத்தியில் உள்ள கர்கேகண்டி நீரோடை பள்ளம் வழியாக சுமார் 20 கி.மீ. பயணம் செய்தே இந்த கிராமங்களுக்குச் செல்ல முடியும். இந்நிலையில், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்யும் கனமழை காரணமாக, கர்கேகண்டி நீரோடை பள்ளத்தில், காட்டாறு வெள்ளமாக ஓடுவதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, மக்கள் கிராமங்களுக்கு செல்ல முடியாமல் முடங்கியுள்ளனர். இங்கு சாலைவசதி கோரி நீண்டநாட்களாக கோரிக்கை வைத்தும் அரசு நிர்வாகம் கண்டுகொள்ளவில்லை.

திமுக ஆட்சிக்கு வந்து கடந்த 5 ஆண்டுகளில் சாலைகள், பாலங்கள் அமைக்க சுமார் ரூ.78 ஆயிரம் கோடி செலவிட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கை கூறுகிறது. அந்த நிதி எங்கு சென்றது என்பதற்கு, முதல்வர் ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். சாலை வசதிகள் இல்லாத மலைக் கிராமங்களுக்கு போர்க்கால அடிப்படையில் உடனடியாக சாலைகள், உயர்மட்டப் பாலங்கள் அமைத்து தரவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# “அதிமுக ஒன்றிணைய கட்சி தலைமைக்கு நான் கெடு விதிக்கவில்லை” - செங்கோட்டையன்

கோவை, அக்.25-

அதிமுக ஒன்றிணைய நான் கட்சி தலைமைக்கு கெடு விதிக்கவில்லை என அதிமுக முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். அதிமுக முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் எம்.எல்.ஏ நேற்று கோபியிலிருந்து கார் மூலம் கோவை வந்தார். கோவையிலிருந்து விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக கோவை விமான நிலையத்தில் செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் கூறும்போது, ‘‘அதிமுக ஒன்றிணைப்பு குறித்து நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள், விரைவில் நல்லது நடக்கும். அதிமுக ஒன்றிணைய 10 நாள் கெடு விதிக்கவில்லை. பத்து நாட்களில் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும். ஒரு மாதத்திலோ அல்லது ஒன்றரை மாதத்திலோ முடிவெடுக்க வேண்டும் என்று தான் தெரிவித்தேன்.

ஆனால், ஊடகத்தினர் நான் கூறியதை தவறாக புரிந்து கொண்டனர்’’ என்றார். இறுதியாக, ராணுவ கட்டுப்பாடுடன் இருந்த அதிமுக கட்சி இப்போது இப்படி ஆகிவிட்டதே என செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு, ‘அது உங்கள் கருத்து’ என செங்கோட்டையன் பதில் அளித்தார்.



# கேதார்நாத் கோயில் நடை அடைப்பு

ருத்ரபிரயாக், அக்.25-

உத்தராகண்ட் மாநிலம் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் புகழ்பெற்ற கேதார்நாத் சிவன் கோயில் அமைந்துள்ளது.

சார்தாம் யாத்திரையின் ஒரு அங்கமான இந்த கோயில் ஆண்டுதோறும் கோடை காலத்தின் தொடக்கத்தில் திறக்கப்பட்டு குளிர்காலத்தின் தொடக்கத்தில் மூடப்படும். அந்த வகையில், குளிர்காலம் தொடங்க உள்ளதால் கேதார்நாத் கோயில் நடை நேற்று அடைக்கப்பட்டது. முன்னதாக, நேற்று காலையில் சிறப்பு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி, கோயில் நிர்வாகக் குழு அதிகாரிகள், அர்ச்சகர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். கோயில் நடை அடைக்கப்பட்டதையடுத்து, இனி பகவான் கேதார்நாத், குளிர்கால இல்லமான உகிமத்தில் உள்ள ஓம் காரேஷ்வர் கோயிலில் அருள் பாலிப்பார்.

# மது விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை: அமைச்சர் முத்துசாமி உறுதி

ஈரோடு, அக்.25-

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் முத்துசாமி ஈரோட்டில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: தமிழகத்தில் மது விற்பனையை அதிகரிக்க அரசு எந்த கூடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆண்டுதோறும் மது விற்பனை அதிகரிப்பது வழக்கமான ஒன்று. இதற்காக அரசு தனி முயற்சி எடுப்பதில்லை. மாறாக, மதுக் கடைகளை படிப்படியாக மூடும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

மது பாட்டிலுக்காக வாங்கப்படும் ரூ.10 அரசின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. அந்தப் பணத்தை தவறாகப் பயன்படுத்த முடியாது. நீதிமன்ற உத்தரவுப்படி தான் மது பாட்டில்களுக்கு வைப்புத்தொகை பெறப்படுகிறது. ஆனால், கூடுதலாக 10 ரூபாய் பெறப்படுவதாக தவறாக சித்தரிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# தாம்பரம் - செங்கல்பட்டு 4வது பாதை திட்டத்துக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல்

சென்னை, அக்.25-

தாம்பரம் செங்கல்பட்டு இடையே ரூ.757.18 கோடியில் 4வது ரயில் பாதை திட்டத்துக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை எழும்பூரில் இருந்து தென் மாவட்டங்களுக்கு புறப்படும் பெரும்பாலான ரயில்கள் செங்கல்பட்டு வழியாக செல்கின்றன. தினசரி 60க்கும் மேற்பட்ட விரைவு ரயில்களும், 200க்கும் மேற்பட்ட மின்சார ரயில்களும் இயக்கப்படுகின்றன.



ஆனால், இத்தடத்தில் 3 பாதைகள் மட்டுமே உள்ளன. கூடுதல் ரயில்களை இயக்க வசதியாக, 4வது புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டத்துக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ரயில்வே அமைச்சகத்திடம் தெற்கு ரயில்வே வழங்கியது.

இந்நிலையில், தற்போது இத்திட்டத்துக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து, தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பு: தாம்பரம் செங்கல்பட்டு இடையே 30 கி.மீ. தொலைவு ரூ.757.18 கோடியில், 4வது பாதை அமைக்க திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

சென்னை கடற்கரை முதல் கன்னியாகுமரி வரையிலான வழித்தடத்தில், தாம்பரம் செங்கல்பட்டு பிரதான பாதை. இந்த வழித்தடத்தில் மின்சார ரயில்களும், விரைவு ரயில்களும் இயக்கப்படுகின்றன. தற்போது, இத்தடத்தில் பயணிகளின் பயன்பாடு 87 சதவீதமாக உள்ளது, 4வது ரயில்பாதை திட்டம் நடைமுறைக்கு வரும்போது, பயணிகளின் பயன்பாடு 136 சதவீதமாக உயரும்.

பயணிகள் நெரிசல் குறையும். இது, மின்சார ரயில் சேவையை செங்கல்பட்டு வரையில் நீட்டிக்கவும் உதவும். தாம்பரம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளில் அதிகரிக்கும் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இந்த திட்டம் வரப்பிரசாதமாக அமையும். மேலும், தென் மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகளுக்கும் பெரிதும் உதவும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் வரவேற்பு: புதிய வழித்தட திட்டத்துக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்ததற்கு, ரயில் பயணிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# முப்படைகளுக்கு ரூ.79,000 கோடியில் ராணுவ தளவாடம் கொள்முதல்: பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல்

புதுடெல்லி, அக்.25-

ரூ.79,000 கோடி மதிப்பில், முப்படைகளுக்கு தேவையான ராணுவ தளவாடங்கள் வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.




ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பின் ராணுவ தளவாட பொருட்கள் கொள்முதலுக்கு உடனுக்குடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. கடந்த ஆகஸ்ட் 5ம் தேதி ரூ.67,000 கோடியில் தள வாடங்கள் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் நவீன தளவாடப் பொருட்கள் தேவை என முப்படைகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதையடுத்து பாதுகாப்பு தளவாடப் பொருட்கள் கொள்முதல் கவுன்சில் கூட்டம், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் கடற்படைக்காக, கரையில் ராணுவ வீரர்கள், சரக்குகளை இறக்கும் வசதியுடன் கூடிய போர்க்கப்பல்கள், 30 எம்.எம் பீரங்கிகள், நவீன எடை குறைவான டார்பிடோக்கள், எலக்ட்ரோ ஆப்டிக்கல் கண்காணிப்பு கருவிகள், 76 எம்எம் பீரங்கிகளுக்கான ஸ்மார்ட் குண்டுகள் ஆகியவை வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தரைப்படை மற்றும் விமானப்படையுடன் இணைந்து பணியாற்றவும், அமைதிப்படை நடவடிக்கைகள், பேரிடர் காலத்தில் நிவாரண பணிகளை மேற்கொள்ளவும் கடற்படைக்கு எல்பிடி கப்பல்கள் உதவியாக இருக்கும். அதேபோல் டிஆர்டிஓ உள்நாட்டில் தயாரித்துள்ள ஏஎல்டபிள்யூடி டார்பிடோக்கள் மூலம் எதிரி நாட்டின் அனைத்து வகையான நீர்மூழ்கி கப்பல்களையும் தகர்க்க முடியும். 30 எம்எம் என்எஸ்ஜி பீரங்கிகள், கடல் கொள்ளையர்கள் மீது தாக்குதல் நடத்த கடற்படை மற்றும் கடலோர காவல் படைக்கு உதவியாக இருக்கும்.

தரைப்படைக்காக, எதிரி படைகளின் கவச வாகனங்களை தகர்க்கும் நாக் ஏவுகணைகள் மற்றும் எலக்ட்ரானிக் உளவு கருவிகள் மற்றும் கன ரக வாகனங்கள் வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விமானப்படைக்காக தானியங்கி ஆயுதங்கள் உட்பட இதர தளவாடப் பொருட்கள் வாங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.79,000 கோடி.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000